**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 458/2023**
திரு.பாஸ்கரன் (D.W –2) **17.02.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. வாதி, பிரதிவாதிகள் மீது என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பத்திரத்தை வைத்து சீட்டு பணம் வாங்கி உள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். முதல் பிரதிவாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். முதல் பிரதிவாதி சொன்னதின் அடிப்படையில் தான் தாவா நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். முதல் பிரதிவாதி குமரேசன் எங்கு வசித்து வருகிறார் அவருடைய வீட்டின் கதவு எண் என்னவென்றால் கதவு எண் தெரியாது குளத்துபாளையத்தில் வசித்து வருகிறார்.

2. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் **வா.சா.ஆ–1** ல் இணைக்கப்பட்டுள்ள உயிர்ப்பு கடிதத்தில் உள்ள புகைப்படம் முதல் பிரதிவாதியுடையது என்றால் சரி. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 14.10.2009 தேதியிட்ட ஆவணத்தில் உள்ள புகைப்படத்தில் உள்ளது முதல் பிரதிவாதிதான் என்றால் ஆமாம். 14.10.2009 ஆம் வருடத்தில் பொது அதிகார ஆவணத்தில் கடைசி பக்கத்தில் உள்ள ஒலி நகல் புகைப்படம் மட்டும் **வா.சா.ஆ–7**(கற்றறிந்த முதல் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் இந்த ஆவணம் மற்றும் புகைப்படத்தை முதல் பிரதிவாதி விசாரணையின் போது காண்பிக்க வாதி தரப்பில் தவிர்த்து உள்ளார்கள் என்ற ஆட்சியபனை செய்தார் இந்த ஆட்சேபனை தீர்ப்புரையின் போது கவனத்தில் கொள்ளப்படும். கற்றறிந்த

வாதி தரப்பு வழக்கறிஞர் ஒன்றாம் பிரதிவாதி குறுக்கு விசாரணையில் பொது அதிகார ஆவணத்தை மறுத்த பிறகு ஆவணத்தின் நகல் பெற்று தற்போது இந்த சாட்சியின் மூலம் கேள்வி கேட்கப்படுவதாக கூறினார் இந்த ஆட்சேபனை தீர்ப்புரையின் போது கவனத்தில் கொள்ளப்படும்) .

3. தாவா சொத்து குமரேசனுக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். இரண்டாம் பிரதிவாதியிடம் சீட்டு போட சென்றபோது ஆவணங்கள் இருந்தால் தான் சீட்டில் சேர்க்க முடியும் என்பதற்கும் அவர் சீட்டு நடத்துவதற்கு முதல் பிரதிவாதி என்னிடம் ஆவணங்களை காண்பித்தாரா என்றால் இல்லை. முதல் பிரதிவாதி இரண்டாம் பிரதிவாதிக்கு என்ன ஆவணங்கள் ஏற்படுத்தி கொடுத்தார் என்று தெரியுமா என்றால் ஆவணங்களை வாங்கிக் கொண்டு சீட்டு சேர்த்தார். என்ன ஆவணங்கள் முதல் பிரதிவாதி எழுதி கொடுத்தார் என்று தெரியுமா என்றால் புரோநோட்டிலும் வெறும் பேப்பரிலும் எழுதி வாங்கிக் கொண்டார்கள். அன்றைய தேதியில் முதல் பிரதிவாதியுடன் நான் இரண்டாம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்ததாக சொல்லும் இடத்திற்கு செல்லவில்லை என்றால் ஆமாம்.

4. முதல் பிரதிவாதிக்கும் இரண்டாவது பிரதிவாதிக்கும் இடையே இருந்த வரவு செலவு விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சீட்டு நடந்தது மட்டும் தான் தெரியும். 14.10.2009 ஆம் தேதி முதல் பிரதிவாதி இரண்டாம் பிரதிவாதிக்கு பதிவு ஏற்பட்ட பொது அதிகார ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்பது தெரியுமா என்றால் தெரியாது. அதில் சாட்சி கையொப்பம் எதுவும் நீங்கள் செய்யவில்லை என்றால் ஆமாம். பொது அதிகார ஆவணம் ரத்து செய்யப்படவில்லை என்பதும் எனக்குத் தெரியாது என்றால் ரத்து செய்யவில்லை என்பது எனக்கு முதல் பிரதிவாதி சொல்லி தெரியும்.

5. தாவா கிரைய ஒப்பந்த ஆவணம் **வா.சா.ஆ–1** பதிவு ஏற்பட்ட போது முதல் பிரதிவாதி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றுள்ளார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். முதல் பிரதிவாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க உண்மை சங்கதிகளை தெரிந்து கொண்டு சீட்டு நடத்துவதற்காக ஆவணங்கள் கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு விவரங்கள் முழுவதும் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். முதல் பிரதிவாதி தாவாவில் என்ன எதிர்வாதம் ஏற்படுத்தி உள்ளார் என்றால் பத்திரங்கள் வேண்டும் என்று எதிர்வாதம் செய்கிறார். வழக்கு விவரங்கள் எதுவும் தெரியாமல் முதல் பிரதிவாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஓம்/–கே.ஆர்.கண்ணன்.
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.